Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**<u>S.C.No.32 of 2020</u>**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W. 12 (L.W. 11 ) | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.பெருமாள்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 19.09.2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மெனசியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் கோயமுத்தூரில் இருந்ததால் வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 3** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து மட்டும **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 01.01.2020ம் தேதி காலை 10.00மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த ஜெகதீசன் மகன் கலகவேந்தன் என்பவரும் எங்கள் சொந்த வேலையாக சேலம் போக வேண்டி சாமியாபுரம் கூட்ரோடு பஸ் நிறுத்ததில் பஸ்சுக்காக நின்றிருந்த போது பாப்பிரெட்டிப்பட்டி காவல் ஆய்வாளர் ஆகிய நீங்கள் எங்கள் ஊரை சேர்ந்த முருகேசன் மகன் டேவிட் (எ) கணபதி என்பவரை கைது செய்து அவரை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது எங்களிடம் வழக்கின் நிமித்ததை எடுத்து சொல்லி எங்களை சாட்சியாக இருக்க கேட்டு கொண்டு எங்கள் முன்னிலையில் டேவிட் என்பவா எந்தவித ஆசை வார்த்தைகளோ

அச்சுறுத்தலோ இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 27.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு மௌசி அரசு மேனிலைப்பள்ளி அருதுகே குடிபோதையில் இருந்த தங்கள் ஊரை சேர்ந்த செல்லக்காரன் மகன் தமிழரசன் இடம் சென்று எனக்கும் குடிக்க ஒரு குவார்ட்டா வாங்கி கொடுடா என்று கேட்டதாகவும், அதற்கு தமிழரசன் நான் அரூர் சென்ற போது அங்கு ஒருத்தன் கிட்ட ஒரு குவாட்டார் வாங்கி குடிச்சிட்டு வந்தேன் என்றும்,

2) இன்னைக்கு ஒயின் ஷாப் லீவு என்று சொன்னதற்கு தனக்கு கோபம் வந்து இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அப்போது மௌசியை சேர்ந்த ராஜி மகன் பெருமாள் என்பவர் தங்கள் இருவரையும் சமாதானப்படத்தி அனுப்பி வைத்ததாகவும், பின்பு மாலை சுமார் 6 மணிக்கு மௌசி பிரபு வெல்டிங் கடை முன்பு நின்று கொண்டிருந்த தமிழரசனை பார்த்து நீ எனக்கு குவாட்டர் வாங்கி தரல அப்படின்னு சொல்லி வாக்குவாதம் செய்து தள்ளுமுள்ளு ஏற்பட்ட போது அங்கு வந்த அதே பெருமாள் என்பவர் தன்னை பார்த்து ஏண்டா மறுபடியும், மறுபடியும் தமிழரசன்கிட்டே சண்டைக்கு போர என்று கேட்டதற்கு தனக்கு கோபம் வந்து அவரை பார்த்து ஏண்டா தேவடியா கண்டார ஓலி மகனே என்னை ஏண்டா தடுக்கிற உன் சொந்தகாரனுக்கு நீ சப்போட்டா வரியாடா உன்னையை முதல்ல போட்டுத்தள்ளுறேன் என்று சொல்லி

தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த சூரிக்கத்தியை எடுத்து இத்தோட செத்துப்போடா நாயே என்று பெருமாளை கத்தியால் நெஞ்சுக்குழிக்கு இடது பக்கம் ஒரு குத்தும், நெஞ்சுகுழிக்கு வலது பக்கம் ஒரு குத்தும் தொப்புலுக்கு கீழே இடது பக்க வயிற்றில் ஒரு குத்தும் குத்தியதாக கொடுத்த வாக்குமூலத்தில் நாங்க இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை .. இல்லை.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**<u>S.C.No.32 of 2020</u>**

Deposition of P.W. 13 (L.W. 14 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.அருள்வடிவழகன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 19.09.2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோவை மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.12.2019ம் தேதி பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி

ஆய்வாளராக பணியில் இருந்த போது மௌனசியை சேர்ந்த பெருமாள் என்பவா் அடிதடி வழக்கில் காயம்பட்டு பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் படி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சிவக்குமார் என்பவர் மருத்துவமனை சென்று உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் பெருமாள் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அவருடைய மகன் வெங்கடேசன் என்பவரை விசாரித்து பெற்று வந்த ஆஜர் செய்த வாக்குமூலத்தின் படி பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 360/2019 சட்டபிரிவு 294(பி), 324, 506(ii) இதசவாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகாரை பாப்பிரெட்டிப்பட்டி கனம் நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்தும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து சம்பவ இடமான மௌனசிக்கு சுமார் 20.30மணிக்கு சென்று சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் 1) செல்வம் 2) அண்ணாமலை அவர்களின் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். மற்றும் அங்கிருந்த கண்ணுற்ற சாட்சிகள் வாதி வெங்கடேசன், 2) தமிழரசன் 3) ராஜா, 4) ஸ்டாலின், 5) ஜெகதீசன், 6) ராஜா த/பெ ராஜீ அவர்களை தனி தனியாக விசாரணை செய்தேன். சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்த்ததிலிருந்தும், சாட்சிகளை

விசாரணை செய்தததிலிருந்தும் இவ்வழக்கானது கொலை முயற்சி வழக்கு என்பதால் மேல் விசாரணைக்காக பாப்பிரெட்டிப்பட்டி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகவும், பார்வை மகஜா் **அ.சா.ஆ.6** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பாப்பிரெட்டிப்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை 04.02.2020 அன்று என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

*மருத்துவமனையிலிருந்து எனக்கு 19.00 மணிக்கு தகவல் வந்தது. முதல் தகவல் அறிக்கை 19.30மணிக்கு பதிவு செய்யப்பட்டது. மறுநாள் காலை முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் சுமார் 1/2 கிமீ தூரம் இருக்கும். இரவு ஆனதால் அடுத்த நாள் காலை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், அதனால் நீதிமன்றத்திற்கு அனுப்ப கால தாமதமானது என்றால் சரியல்ல.*

*2) சம்பவம் பிரபு என்பவரின் வெல்டிங் கடைக்கு முன்பு நடந்தது. இந்த வழக்கின் முதல்கட்ட விசாரணையை நான் தான் மேற்கொண்டேன். எதிரியும், சாட்சியும் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும்,*

பிரபு வெல்டிங் கடையின் அமைந்திருக்கும் இடமே வேறு சமூகத்தை சேர்ந்தவா் என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. எதிரி மற்றும் இந்த வழக்கின் சாட்சிகள் குடியிருக்கும் இடத்திலிருந்து பிரபு வெல்டிங் கடை அமைந்திருக்கும் இடம் 1/2 கிமீ தூரத்தில் உள்ளது என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. பிரபு வெல்டிங் கடைக்கு எதற்கு போனார்கள் என்று நான் விசாரித்தேன என்றால் நான் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

3) சம்பவம் நடந்த தேதி 27.12.2019.அன்றைய தினம் இடைதேர்தல் நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகள் ஓட்டு போடுவதற்காக போனார்களா என்றால் இரவு 8.30மணி என்பதால் ஓட்டு போட வேண்டிய அவசியமில்லை. 27.12.2019 மாலை 5.00மணியளவில் எதிரிக்கும் தமிழரசன் என்பவருக்கும் குவார்டா் வாங்கி கொடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டது. அதை காயம்பட்ட பெருமாள் என்பவர் சமாதானம் செய்து இருவரையும் அனுப்பியுள்ளார். அதை தொடர்ந்து இருவரும் மாலை 6.00மணிக்கு மெளசி பிரபு வெல்டிங் கடை முன்பு அதே இரண்டு நபர்களும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்றும், மீண்டும் அதே பெருமாள் அவர்களை சமாதானம் செய்து வைக்க சென்ற போது டேவிட் என்பவர் பெருமாளை சமாதானம் செய்து வைத்து அனுப்பியுள்ளார். ஆனால் எதிரி பெருமாளை

கத்தியால் குத்திவிட்டார். நான் 08.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு போனேன். ஆனால் சம்பவம் 06.00 மணிக்கு நடந்தது.

4) அன்றைய தினம் இடைதேர்தல் என்று எனது வழக்கு கோப்புகளில் குறிப்பிடவில்லை. ஓட்டு போடும் இடத்தில் சிஆர்பி போலிசார் அலுவலில் இருந்தார்கள் என்றால் சரிதான். சி.ஆர்.பி போலிசார் ஓட்டு போடும் இடத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் அடிதடி ஏற்பட்டது என்றால் அது போல் எதுவுமே நடக்கவில்லை. சிஆர்பி போலிசார் அடிதடி நடத்தியதால் அதனால் தெறித்து மதுபோதையில் ஓடிய பெருமாள் மற்றும் தமிழரசன் இருவருக்குமே அவர்களாகவே காயம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றாலும், அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் ரத்த சம்பந்தப்பட்ட சாட்சிகள் என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை.

5) நான் இந்த வழக்கில் மொத்தம் 8 சாட்சிகளை விசாரித்தேன். இதில் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரையும் நான் தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் இந்த வழக்கில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் அடுத்தகட்ட விசாரணை அதிகாரி எந்தெந்த சாட்சிகளை விசாரித்துள்ளார் என்று எனக்கு தெரியாது, அவருக்கு தான் தெரியும். நான் விசாரித்த

சாட்சிகளை அடுத்த வந்த புலன் விசாரணை அதிகாரி மறு விசாரணை செய்தாரா என்று எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் மருத்துவமனையில் சாட்சி அனுமதிக்கப்பட்டதை தெரிந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வழக்கின் 8 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அடுத்த கட்ட விசாரணை என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கொண்டே இந்த வழக்கில் என்னால் தயார் செய்த அனைத்து ஆவணங்களையும் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வேறு சமூகத்தை சேர்ந்த இந்த வழக்கில் சாட்சிகள் சம்பவ இடத்திற்கு இரவு 8.30 மணிக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை நடந்ததாக உண்மையை மறைத்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.